ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை வாங்கி தீர்வு வழங்கினார். அருகில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, நடராஜன், கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலை தீபத்திருவிழாவை முன்னிட்டு

தூய்மை அருணை சார்பில் கிரிவலப் பாதையில் தூய்மை பணி!

அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது!

திருவண்ணாமலை, நவ.22 -

திருவண்ணாமலை தீபத் திருவிழாவை முன்னிட்டு கிரிவலப்பாதையில் தூய்மை அருணை சார்பில் நடைபாதை சுத்தம் செய்தல் குப்பைகள், முட்புதர்கள், மண்மேடுகள் அகற்றுதல், பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றுதல் உள்ளிட்ட பணிகள், பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணை அமைப்பாளருமான எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

ஏற்கனே திருவண்ணாமலை அய்யங்குளம் தூர்வாரும் பணி, சரிந்துள்ள படிகட்டுகளை சீர்அமைக்கும் பணி, படிகட்டுகளுக்கு கைப்பிடி அமைக்கும் பணி தூய்மை அருணை சார்பில் நடைபெற்று வருகிறது. அதனை தொடர்ந்து 21.11.2023 செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணி முதல் தூய்மை அருணை சார்பில் தூய்மை பணி நடைபெற்றது.

முன்னதாக தூய்மை அருணையின் 1000க்கும் மேற்பட்ட தூய்மை காவலர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், துணை நிற்போம்! தொண்டு செய்வோம்! என்ற உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டனர்.

மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன் தலைமையில் கிரிவலப்பாதை செங்கம் சாலையில் இருந்து ஆணாய்பிறந்தான் ஊராட்சி வரை 10 வார்டுகளும், டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையில் ஆணாய்பிறந்தான் ஊராட்சியில் இருந்து பழனி ஆண்டவர் கோவில் வரை 10 வார்டுகளும், ப.கார்த்தி வேல்மாறன் தலைமையில் பழனி ஆண்டவர் கோவிலில் இருந்து வருணலிங்கம் வரை 10 வார்டுகளும், ப்ரியா விஜயரங்கன் தலைமையில் வருணலிங்கத்தில் இருந்து அடிஅண்ணாமலை ஊராட்சி வரையில் 9 வார்டுகளும் மற்றும் மாடவீதியில் தூய்மை பணிக்கான மேற்பார்வையாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, அறங்காவலர் குழு உறுப்பினர் சினம்.பெருமாள் ஆகியோர் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தூய்மை பணிகளை மேற்கொண்டனர்.

கிரிவலப்பாதை நடைபாதையில் கிருமிநாசினி கொண்டு தூய்மை செய்யும் பணியினை பொதுப்பணித்துறை அமைச்சரும், தூய்மை அருணை அமைப்பாளருமான எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து கிரிவலப் பாதையில் நடைபாதை சுத்தம் செய்தல் குப்பைகள், முட்புதர்கள், மண்மேடுகள் அகற்றுதல், பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றுதல் உள்ளிட்ட பணிகள் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது:

உலகப் பிரசித்தி பெற்ற திருவிழாவான கார்த்திகை தீபத்திற்கு வருகை தரும் லட்சக்கணக்கான பக்தர்கள் 14 கிலோமீட்டர் தொலைவு கொண்ட கிரிவலப் பாதையை முழுமையாக பயன்படுத்தி கிரிவலம் மேற்கொள்வது பழக்கம், கடந்த ஆண்டு முப்பது லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்த நிலையில் இந்த ஆண்டு அதைவிட கூடுதலாக வருவதற்கு வாய்ப்பு உள்ளது.

தீபத் திருவிழாவிற்கு வருகை தரும் ஆன்மீக பக்தர்களுக்கு கழிப்பிட வசதி குடிநீர் வசதி முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? என ஆய்வு செய்து வருவதாகவும் கூறிய அவர் கடந்த ஆண்டு கிரிவலம் வந்த பக்தர்களுக்கு கழிப்பிடத்திற்கு போதுமான தண்ணீர் இல்லை என குற்ற ச்சாட்டு எழுந்ததையடுத்து இந்த ஆண்டு 90 லட்சம் மதிப்பில் தேவனந்தல் ஏரியில் இருந்து குழாய் மூலம் சீனிவாசா பள்ளி அருகே ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி கட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மலையேறும் பக்தர்கள் மற்றும் கிரிவலம் வரும் பக்தர்கள் பிளாஸ்டிக் பொருட்கள் கொண்டு செல்வதற்கும் கற்பூரம் ஏற்றுவதற்கும் முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கிரிவலப் பாதையில் உள்ள மரங்களில் ஆபத்தான கிளைகளை அழிக்கும் பணியிலும் தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். கிரிவலப் பாதையில் உள்ள நடைபாதை வியாபாரிகளுக்கு தனியாக கடைகள் ஒதுக்கப்பட்டுள்ளது. நடைபாதையில் கடைகள் வைக்கக்கூடாது. தீபத் திருவிழாவிற்கு வரும் ஆன்மீக பக்தர்களின் பாதுகாப்பு கருதி நூற்றுக்கும் மேற்பட்ட காவல்துறையினர் மக்களோடு மக்களாக இணைந்து மக்களுக்கு உதவும் வகையில் செயல்படுவார்கள்.

கிரிவல பாதையை தூய்மைப்படுத்தும் பணியில் நகராட்சி துறை ஊராட்சித் துறை உள்ளாட்சித் துறை நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறையினர் தூய்மை பணியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக திருவண்ணாமலை நகரை கடந்த பல ஆண்டு ஆண்டுகளாக தூய்மைப்படுத்தி வரும் தூய்மை அருணை தொண்டு நிறுவனத்தினர் 1000 த்திற்கும் மேற்பட்டோர் மஞ்சள் உடையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

14 கிலோமீட்டர் தொலைவு கொண்ட கிரிவலப் பாதையை 15 குழுக்களாக பிரித்து தூய்மை காவலர்கள் வருவாய்த் துறையினர் நெடுஞ்சாலை துறையினர் பொதுப்பணி துறையினர் அரசு ஊழியர்கள் உள்ளிட்ட சுமார் 4000 மேற்பட்டவர் இந்த பணியில் முழுமையாக ஈடுபட்டு கிரிவலப் பாதையை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். 15 குழுக்கள் ஆக தூய்மை பணியாளர்கள் பிரிக்க ப்பட்டு கிரிவலப் பாதை தூய்மைப்படுத்தும் படி நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு தீபத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேட்டியின் போது கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், மேற்பார்வை பொறியாளர் பழனிவேல், அறங்காவலர் குழுத்தலைவர் இரா.ஜீவானந்தம், நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, எஸ்.பன்னீர் செல்வம், இணை ஆணையர் சி.ஜோதி தூய்மை அருணை ஒருங்கிணைப்பாளர்கள் அ.அருள்குமரன், இல.குணசேகரன், அருணை வெங்கட், ஜீவ ரேகா விஜயராஜ், அ.கோவிந்தன், எஸ்.எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்த்குமார், எஸ்.கே.டிவீரா, ம.செந்தில், சு.விஜி (எ) விஜயராஜ், ஆர்.கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், சு.ராஜாங்கம், ந.சீனுவாசன், இரா.ஜீவானந்தம், மெட்ராஸ் சுப்பிரமணி, காலேஜ் ரவி, கு.காளிதாஸ், குட்டி புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி ஆ.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், கோ.பழனி, கே.பிரகாஷ், பிஜிமுருகன், கோபி.சங்கர், சென்னை என்.சுரேஷ், எம்.கே.எஸ்.முபாரக், பா.ஷெரீப், கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, ஜா.ஜின்னா, மூ.காமேஷ், மு.அக்கிம்சேட், சி.கே.சசிகுமார், கோல்டு எஸ்.பிரபு மற்றும் 1000க்கும் மேற்பட்ட தூய்மை காவலர்களும் கலந்து கொண்டனர்.

தி.மு.க. நெசவாளர் அணி

சென்னை மண்டல மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி சென்னை தெற்கு, சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு காஞ்சிபுரம் மாநகரம், தாம்பரம் மாநகரம் ஆகிய மாவட்ட - மாநகர நிர்வாகிகள் கூட்டம் இன்று (22-11-2023 புதன்கிழமை) காலை 10.00 மணி அளவில் சென்னை, தேனாம்பேட்டை, அண்ணாசாலை, அன்பகத்தில் எனது தலைமையில், நெசவாளர் அணி துணைத் தலைவர் பள்ளிப்பட்டு ஒ.எ.நாகலிங்கம் வரவேற்புரையாற்றிட, செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அருப்புக்கோட்டை க.பழனிசாமி, பரணி கே.மணி, நெல்லை எஸ்.பெருமாள், பொள்ளாச்சி கே.எம்.நாகராஜன், ஈரோடு சிந்து ரவிச்சந்திரன் - துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், கோபி மணிமாறன், திருச்சி கோவிந்தசாமி, தேனி ஆ. ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் கழக துணைப் பொதுச்செயலாளர் - அமைச்சர் க.பொன்முடி - கைத்தறி துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் த. வேலு, எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

மாநில நெசவாளர் அணிச் செயலாளர் காஞ்சிபுரம் தி.அன்பழகன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் மாவட்ட - மாநகர நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா;
கழக ஆக்கப் பணிகள் குறித்து.

நன்னியூர் இராஜேந்திரன்
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகர அலுவலகத்தில் மாநகர கழக சார்பு அணிகளின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.உடன் வில்சன் மணித்துரை, மாயா, அலிஃப் மீரான், இனியன், செல்வம், அன்பழகன், நச்சினார் இனியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் மதுரை மாவட்டம் ஆத்திகுளம் திட்டப்பகுதில் ரூ.30.49 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 320 அடுக்குமாடி குடியிருப்புக்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள். அதனை தொடர்ந்து மதுரை ஆத்திக்குளம் அடுக்குமாடி குடியிருப்பில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பயனாளிகளுக்கு குடியிருப்புக்கான ஆனணயினை வழங்கிய போது எடுத்தபடம். உடன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மண்டலத்தலைவர் வாசுகி சசிக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

அமைச்சர் கே.என்.நேரு வரவேற்புரை! அமைச்சர் துரைமுருகன்-டி.ஆர்.பாலு எம்.பி.-
அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - கனிமொழி கருணாநிதி எம்.பி.- அமைச்சர் எ.வ.வேலு முன்னிலை!

திருமங்கலம் கோபால் புதல்வர் கோ.இராஜ்குமார் -சா.சஜீ மணவிழா!

தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, நவ. 22 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாதுகாப்பாளர் - சென்னை, மைலாப்பூர், சி.ஐ.டி. காலனி நினைவில் வாழும் திருமங்கலம் கோபால்-பு. சரோஜினி ஆகியோரின் புதல்வர் கோ. இராஜ் குமாருக்கும், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், மகாதேவபுரம், நாடார் காலனி, அ.சாகுல் அமீது-மு.வகிலா பானு ஆகியோரின் புதல்வி சா. சஜீக்கும் மணவிழா 24.11.2023-வெள்ளிக்கிழமை காலை 9.15 மணியளவில் தேனாம்பேட்டை, அண்ணா சாலையில் அமைந்துள்ள காமராஜர் அரங்கில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவினை கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றார்.

இம்மணவிழாவில் அமைச்சர் கே.என். நேரு வரவேற்புரையாற்றுகிறார்.

அமைச்சர் துரைமுருகன், டி.ஆர். பாலு எம்.பி., அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் ஆன்றோரும் சான்றோரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறுநிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டத்தில்

தமிழ்நாட்டிற்கு குடியரசுத் தலைவரால் வழங்கப்பட்ட - சிறந்த செயல் திறனுக்கான விருது!

முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, நவ.22-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (20.11.2023) தலைமைச் செயலகத்தில், நவம்பர் 5 அன்று புது டெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற உலக உணவுத் திருவிழா நிகழ்ச்சியில், பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டத்தில் சிறந்த செயல் திறனுக்காக இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட விருதினை, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

அதன் விபரம் வருமாறு:

நமது நாட்டில், அமைப்பு சாரா உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை வலுப்படுத்தும் விதமாக "பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம்" 60 சதவீதம் ஒன்றிய அரசின் நிதி பங்களிப்புடனும் மற்றும் 40 சதவீதம் மாநில அரசின் நிதி பங்களிப்புடனும் 2020 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், தனிநபர்கள் (Individuals), சுய உதவிக்குழுக்கள் (SHGs), உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்(FPOs) மற்றும் கூட்டுறவு அமைப்புகளும் (Cooperatives) புதிய தொழில் தொடங்கவோ அல்லது ஏற்கனவே செயல்பட்டு வரும் தொழிலை விரிவாக்கம் செய்திடவோ 10 சதவீதம் பங்களிப்பு தொகையுடன் 35 சதவீதம் மானியமாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் மானியத் தொகையுடன் கடனுதவி வழங்கப்படுகிறது.

மேலும், சுய உதவிக்குழுவில் உள்ள உறுப்பினருக்கு விதை மூலதனம் (Seed Capital) மூலமாக சிறு கருவிகள் வாங்கிட அதிகபட்சமாக 40 ஆயிரம் ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படுகின்றது. பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் (Common Infrastructure) உருவாக்கிட குழுக்களுக்கு கடன் மானியம் ரூ.3 கோடி வரை வழங்கப்படுகிறது. இக்குழுக்களுக்கு சந்தைப்படுத்துதல் மற்றும் வர்த்தக முத்திரைக்காக (Marketing & Branding) ஏற்படும் செலவினத்தில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

தொழில்முனைவோர் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயார் செய்திடவும், இத்தகைய தொழில் முனைவோருக்கு புதிய தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி அளித்திடவும், பதப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், சேமிப்பு மற்றும் ஆய்வக வசதிகளை அனைத்து தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களும் பயன்படுத்திடவும் தொழில் கற்கும் மையங்கள் (Common Incubation Centre) உதவுகின்றன. இதனை நிறுவிட அரசு நிறுனவங்கள் (100 %) மற்றும் தனியார் நிறுவனங்கள் (50%) ஆகியவற்றிக்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

202021 முதல் 202324 வரை தமிழ்நாட்டில், தனிநபர் பிரிவின் கீழ், இதுவரை 8,410 நபர்களுக்கு கடன்கள் ஒப்பளிப்பு செய்து ரூ.152.20 கோடி மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2,351 விவசாயிகளும், 4,635 பெண்களும் 777 ஆதிதிராவிடர் (SC) பிரிவினரும் மற்றும் 68 பழங்குடியினர் (ST) பிரிவினரும் மானியத்துடன் கடன்பெற்று தொழில் துவங்கி பயனடைந்துள்ளனர்.

உலகிற்கு இந்திய உணவுப் பாரம்பரியத்தை அறிமுகம் செய்திடவும் பல்வேறு உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை இந்தியாவில் நிறுவிடும் பொருட்டும் உலக உணவுத் திருவிழா (World Food India 2023) இவ்வாண்டு நவம்பர் மாதம், 3, 4 மற்றும் 5 ஆகிய நாட்களில் புதுடெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பல்வேறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள், வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் இறுதி நாளான நவம்பர் 5 அன்று, பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தில் சிறந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு உள்ளிட்ட ஐந்து மாநிலங்களுக்கு சிறந்த செயல் திறனுக்கான விருது இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

குரோம்பேட்டை மழைநீர் அகற்றும் பணி!

பல்லாவரம், நவ. 22 -

குரோம்பேட்டை ஜமீன் ராயப்பேட்டை பகுதியில் உள்ள காலி மனைகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் அப்பகுதி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக புகார் வந்ததை தொடர்ந்து இ.கருணாநிதி எம்.எல்.ஏ. காலி மனைகளில் தேங்கி நிற்கும் தண்ணீரை பம்புகள் மூலம் வெளியேற்றுவது குறித்து இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து பல்லாவரம் துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் பல்லாவரம் தாசில்தார் அலுவலகம் அருகே உள்ள பொத்தேரியில் இருக்கும் ஆகாயத் தாமரை செடிகளை அப்புறப்படுத்துவது குறித்து கழிவுநீர் கலப்பது தடுப்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழகம் முழுவதும் உள்நாட்டு மீன் பிடிப்பை ஊக்கப்படுத்தும் வகையில் மீன்வளத்துறை மூலமாக குளம், ஆறு உள்ளிட்ட பகுதிகளில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு வரும் நிலையில்,உலக மீனவர் தினத்தை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி அணைக்கட்டு பகுதியில் உள்ள ஆற்றில் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்ச்சியில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்துகொண்டு தாமிரபரணி ஆற்றில் 2 லட்சம் நாட்டின கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யும் வகையில் ஆற்றில் விட்டார்.உடன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியர் லெட்சுமிபதி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.